1992 செப்டம்பர் 22]

கையாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அது சம்பந்தமாக ஏதாவது நடவடிக்கை எடுத்து இருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-15

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்று நோய்கள், பெரும்பாலான நோய்கள் ரத்தத்தின் மூலமாக பரவுகின்றன என்ற காரணத்தால் அரசாங்கம் கண்காணிப்பாக நிறைய நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது. குறிப்பாக ஏற்கெனவே ரத்தத்தை கொடுத்துவிட்டு பணம் பெற்றுக் கொண்டு போவார்கள். அதற்கென்று தனியாக ஆட்கள் இருந்தார்கள். இப்போது இதை தடை செய்திருக்கிறோம். குறிப்பிட்டவர்களிடத்தில் மட்டும் ரத்தம் எடுக்கப்படுகிறது. எல்லாவிதமான டெஸ்ட்டும் செய்யப்பட்டு, அது சரியான ரத்தம் தான், எந்தவிதமான குறைபாடும் இல்லையென்று, உறுதிப்படுத்தப்பட்ட பிறகு தான் சேமிப்பு நிலையத்தில் எடுக்கிறார்கள். ரத்தம் கொடுக்கிறபோது பரிசோதித்த பிறகு தான் கொடுக்கிறார்கள். மிகக் கடுமையாக இந்த முறை கையாளப்பட்டு, எந்தத் தவறும் நடந்துவிடாமல், நோய் பரவிவிடாமல் இருப்பதற்கு இந்த அரசாங்கம் கவனமாக நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 30, திரு. கே. ஏ. மனோகரன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

30—

ஒசூரில் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பணிமனை.

*9288—திரு. கே. ஏ. மனோகரன் :

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பணிமனை ஒசூரில் திறக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது திறக்கப்படும்?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) பொருத்தமான இடம் தேர்வு செய்யப்பட்டவுடன் போக்குவரத்துக் கழகத்தின் நிதி நிலைமைக்கேற்றவாறு பணி மனை அமைக்கும் பணி மேற்கொள்ளப்படும்.

திரு. கே. ஏ. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு கலவரங்களின் பாதிப்பின் காரணமாக அண்டை மாநிலமான பெங்களூர் செல்லும் பல பேருந்துகள் கடந்த மூன்று மாதங்களில் பல நாட்கள் ஓசூரில் தங்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டதால் இதற்கு துரிதமான நடவடிக்கையெடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிப்காட் நிறுவனத்தின் சார்பாக ஓசூரில் இரண்டு இடங்களை தேர்வு செய்திருக்கிறார்கள். அந்த இடங்களை தேர்வு செய்தவுடனேயே அந்தப்பணிமனையை அமைப்பதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் விரைந்து உத்தரவு வழங்கியிருக் கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 31, திரு என். ஆர். சிவபதி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

31---

புதிய திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்து நிலையம்.

*9792—திரு. என். ஆர். சிவபதி :

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருச்சியில் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத் திற்கு புதிய பேருந்து நிலையம் கட்டப்பட்டும் பொதுமக்கள் பயன்படுத்தப்பெறாத நிலையில் இருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது செயல்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்கு வரத்துத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,